**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 30-01-2024**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-30 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-31 | 2024-02-01 | 2024-02-02 | 2024-02-03 | 2024-02-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 32.0 | 32.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 22.0 | 23.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 100 | 100 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 40 | 40 | 40 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 6 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 110 | 160 | 140 | 120 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 3 | 2 | 2 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 1,2,3,4 தேதிகளில் மிகவும் லேசான மழை மற்றும் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31 முதல் 33 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 முதல் 23 டிகிரி செல்சியஸ் ஆகவும்,காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 முதல் 100 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 முதல் 40 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.காற்றின் வேகமானது மணிக்கு 8 முதல் 10 கி.மீ வரை தென்கிழக்குதிசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 4 முதல் 10 பிப்ரவரி , 2024 வரை இயல்பைவிட குறைவான மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலைகாரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்போது கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## குறுஞ்செய்தி :

வரும் நாட்களில் மிகவும் லேசான மழை மற்றும் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர் பாசனம் செய்யவும்..

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | பனி அதிகமாக இருப்பதால் நெல்லில் குலைநோய் தென்படுகிறது. குலைநோயை கட்டுப்படுத்த அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC பூசணக்கொல்லியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் தெளிக்க வேண்டும். |
| நெல் | நடவு வயலில் களைகளை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பியூட்டாகுளோர் களைக்கொல்லி 2.5 லிட்டர் +25 கிலோ மணலுடன் கலந்து நட்ட மூன்றாம் நாள் இடவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளை குளிரிலிருந்து பாதுகாக்கவும், உடல் வெப்பநிலையை சீராக பராமரிக்கவும் வெதுவெதுப்பான குடிநீரை அளிக்க வேண்டும். கால்நடைகளை வெளிப்புற ஒட்டுண்ணிகளான உண்ணி மற்றும் பேன் போன்றவை தாக்காமல் இருக்க மருந்து குளியல் கொடுக்க வேண்டும். |
| வெள்ளாடு | ஆடுகளுக்கு சளி, காய்ச்சல், தும்மல் இருந்தால் மேலோன்பிளஸ் என்ற மாத்திரை ஒன்று, சல்பாடிமிடின் என்ற மாத்திரை ஒன்று, இரண்டையும் அரைத்து 40 மில்லி தண்ணீரில் கரைத்து வாய் வழியே ஊற்றி விட வேண்டும்.ஆறு மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் அரை மாத்திரையும், மூன்று மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் கால் மாத்திரையும் மூன்று நாட்களுக்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | மழை மற்றும் குளிர்ச்சி காரணமாக கோழி மற்றும் கோழிக்குஞ்சிகளில் சளி ஏற்பட்டால் சிகிச்சையாக என்ரோசின் பி.ஹெச் (ENROCIN BH ) என்ற மருந்தை ஒரு லிட்டர் குடிநீரில் 1 மி.லி வீதம் நான்கு நாட்களுக்கு தரவேண்டும். |